Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MAY 23 2025

வெள்ளிக்கிழமை 23, மே 2025 | ஒளி: 10 கதிர் 245 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

இலஞ்சம் பெற்ற

## பூவரசங்குளம் OIC க்கு விளக்கமறியல்

க.அகரன்

இலஞ்சம் வாங்கும் போது, கைது செய்யப்பட்ட வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

“COVID-19

# திரிபு பரவும் அபாயம் இல்லை”



இலங்கையில் தற்போது புதிய கோவிட்-19 திரிபு பரவும் அபாயம் இல்லை என்றும், எனவே, தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் நிபுணர் டாக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்


தொற்று நோயியல் பிரிவின் தரவுகளின் அடிப்படையில் ஒரு அறிக்கையை வியாழக்கிழமை (21) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பல ஆசிய நாடுகளில் கோவிட்-19 தொற்றுநுகளின் எண்ணிக்கையில் கடந்த சில வாரங்களாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாகவும், இந்த நிலைமைக்கு சமூகத்தின் நோயைச் சமாளிக்கும் திறன் குறைவது உட்பட பல காரணிகள் காரணமாக இருக்கலாம் என்றும் அமைச்சச செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு, தேசிய அளவில் தயார் செய்து பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சகம் மூன்று மடங்காக உயர்த்தியுள்ளது.

செயலாளரின் அறிவிப்பின்படி, நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில் கோவிட்-19க்கான மருத்துவ மாதிரிகளை சோதிக்கும் ஒருங்கிணைந்த சுவாச கண்காணிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தொடர்ச்சி P2



### “கொவிட் புதிய திரிபும் பரவி வருகிறது”

தற்சமயம் எமது நாட்டில் மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவி வருகிறது. 180 வகையான மருந்துகளுக்கு இவ்வாறு பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவு தெரிவித்துள்ளது என தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, LP 8.1 எனப்படும் கொவிட் மாதிரிகளின் துணை மாறுபாடு தற்போது சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா மற்றும் ஹாங்காங்கில் பரவி வருகின்றன.

தொடர்ச்சி P2

சக்விதி – மனைவிக்கு

## பத்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறை

ரூ.100 கோடிக்கு மேல் பொது நிதியை தவறாகப் பயன்படுத்தியதற்காக சக்விதி ரணசிங்க மற்றும் அவரது மனைவிக்கு, பத்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே, வியாழக்கிழமை (22) தீர்ப்பளித்தார்.

சக்விதி ஹவுஸ் கட்டுமான நிதி நிறுவனத்தை நடத்தி வந்தபோது 160 மில்லியன் ரூபாய் மோசடி செய்ததற்காக, இந்த தண்டனையை விதித்தார்.



அபய ரணசிங்க முதியன்செலாகே நந்தன வீரகுமார எனப்படும் சக்விதி ரணசிங்க மற்றும் அவரது மனைவி ஜே. பிரதிவாதிகளான குமாரி அனுராதி ஆகிய இருவருக்கே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஆட்சியமைப்பதற்கு

## “விலை பேசுகின்றனர்”

பெரும்பான்மை இல்லாத சபைகளில் ஆட்சியமைக்க தற்போது பாரியளவில் உறுப்பினர்களுக்கு விலை பேசப்படுகிறது என குற்றஞ்சாட்டிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முறைமை திருத்த வேண்டும் என்றார்.

கற்பிட்டியில் உள்ளூராட்சி சபை



ஒன்றில் ஆட்சியமைக்க அரசாங்கத்தைச் சேர்ந்த ஒருவர் எதிர்க்கட்சியில் ஒரு உறுப்பினருக்கு 25 இலட்சம் ரூபாய் பேரம் பேசி இருப்பதாகவும் தெரிவித்தார்

தொடர்ச்சி P2

## “மக்கள் மீது உப்பு சுமை”

130 ரூபாய்க்கு இருந்த உப்பு பக்கெட் ஒன்றின் விலை 350 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.இறக்குமதி செய்யப்படும் உப்பு பக்கெட் ஒன்றை 150 ரூபாவுக்கு வழங்க முடியும். ஆனால் அவ்வாறு செய்யாமல் மக்கள் மீது பாரிய சுமையை சுமத்தியுள்ளதன் பின்னணியில் பாரிய உப்பு மாபியா இடம்பெற்று வருகிறது. இந்த மாபியாவின் பின்னால் அரசும் உள்ளதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) இடம்பெற்ற ஏற்றுமதி, இறக்குமதி(கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## பிள்ளையானின் மனுவுக்கு திகதி

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதற்கு எதிராக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை ஜூன் 17 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம், வியாழக்கிழமை (22) தீர்மானித்தது.

இந்த மனு உயலட நீதிமன்ற நீதியரசர்களான மஹிந்த சமயவர்தன மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகியோர் அடங்கிய அமர்வு முன் பரிசீலிக்கப்பட்டது.

பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்கல் செய்த மனுவில், சி.ஐ.டியின் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, சி.ஐ.டியின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமாலி, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய,



தொடர்ச்சி P2

பாராளுமன்ற ஊழியர்களின்

## உணவு கட்டணங்கள் மும்மடங்காக அதிகரிப்பு

பாராளுமன்றத்தில் பணியாற்றும் சாதாரண ஊழியர்களின் மாதாந்த உணவு கட்டணத்தை மூன்று மடங்கு அதிகரிக்கப் பாராளுமன்ற சபை குழு தீர்மானித்துள்ளது.

1,000 ரூபாயாக இருந்த சாதாரண ஊழியர்களின் மாதாந்த உணவுக் கட்டணம் 3,600 ரூபாவாக அதிகரிக்கும். பாராளுமன்ற நிர்வாக அதிகாரிகளின் உணவுக் கட்டணத்தை 1,500 ரூபாவிலிருந்து 4,000 ரூபாவாக உயர்த்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்கள் சமர்ப்பித்த முன்மொழிவைத் தொடர்ந்து மாதாந்த



உணவு கட்டணம் அதிகரிக்கப்பட்டதாகப் பாராளுமன்ற அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பாராளுமன்ற ஊழியர்களின் மாதாந்த உணவுக் கட்டணம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

இதற்கிடையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் தினசரி உணவுக் கட்டணம் 2,000 ரூபாவாக ஆக உயர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களே இலக்கு: ஹெரோயின் சிக்கியது

பாலித ஆரியவன்ச

பதுளை-மஹியங்கனை வீதியில் 10,510 மில்லி கிராம் ஹெரோயினை எடுத்துச் சென்ற முச்சக்கர வண்டியின் சாரதி, புதன்கிழமை (21) கைது செய்யப்பட்டுள்ளார். முச்சக்கரவண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளது என பதுளை பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வு பணியகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், பதுளையில் பிரபல தமிழ் பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக இந்த ஹெரோயினை எடுத்துச் சென்றதாகக் கிடைத்த

தொடர்ச்சி P2

## சமலுக்கு எதிராக காணி குற்றச்சாட்டு

முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவினால், மகாவலி அதிகாரசபை ஊடாக பல ஏக்கர் காணிகள் முறையற்ற வகையில் தனது அரசியல் நண்பர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக ஆராயுமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டி பகுதியில் மகாவலி அதிகார சபையினால் கடந்த 10 வருடங்களில் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் வழங்கப்பட்ட முறைமை தொடர்பில் ஆராயுமாறு கோருகின்றேன். முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் கடிதங்களுக்காக ஏக்கர் கணக்கில் காணிகள் வழங்க ப்பட்டுள்ளன.



தொடர்ச்சி P2

## “பிரபாகரனின் உப்பு இனி இல்லை”

**அர்ச்சுனாவுக்கு அமைச்சர் ஹந்துன்னெத்தி பதில்**

உப்பு விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் தொழில்துறை அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்திக்கும் யாழ்.மாவட்ட சுயேச்சை எம்.பியுமான. ராமநாதன் அர்ச்சுனாவுக்கும் இடையே, பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஆனையிறவு உப்பு தொழிற்சாலையில், தெற்கிற்கு வடக்கு உப்பு விநியோகம் நிறுத்தப்பட வேண்டும் என்று ஊழியர்கள் குழுவுடன் ஒரு போராட்டத்தை ஏற்பாடு செய்ததாக அமைச்சர் ஹந்துன்னெத்தி கூறினார்.

“வடக்கு உப்பு மற்றும் தெற்கு உப்பு என்று எந்த உப்பும் இல்லை. எங்களிடம் இலங்கையின் உப்பு உள்ளது. அந்த நாட்களில் நீங்கள் பிரபாகரனின் உப்பை சாப்பிட்டிருக்கலாம். இனி அத்தகைய உப்பு இல்லை. நாங்கள் முழு நாட்டையும் ஒன்றிணைத்துள்ளோம்,” என்று அவர் கூறினார்.

பதிலளித்த எம்.பி. அர்ச்சுனா, வடக்கின் உப்பை தெற்கிற்கு அனுப்பக்கூடாது என்று தான் ஒருபோதும் கூறவில்லை என்றும், ஆனையிறவு உப்பளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க மட்டுமே தான் மத்தியஸ்தம் செய்ததாகவும் கூறினார்.





அமைச்சர் ஹந்துன்னெத்தி தான் பொய் சொல்லவில்லை என்றும், ஆனையிறவு உப்பள ஊழியர்கள் மற்றும் எம்.பி. அர்ச்சுனாவுடன் நடந்த கலந்துரையாடல்களின் குறிப்புகளை மேற்கோள் காட்டுவதாகவும் கூறினார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# "COVID-19 திரிபு பரவும் அபாயம் இல்லை"

மேலும் கண்காணிப்பின் படி, தற்போது. கோவிட்-19 பாதிப்புகளில் அதிகரிப்பு இல்லை. இலங்கையில் தொற்றுநோய் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளை முன்கூட்டியே அடையாளம் காணத் தேவையான ஆய்வக கண்காணிப்பு அமைப்பும் தீவிரமாகச் செயல்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

மற்ற சுவாச நோய்களைப் போலவே (எ.கா. இன்ஃப்ளூயன்ஸா), அவ்வப்போது COVID-19 எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும், பொதுமக்களுக்கு தற்போது ஆபத்து குறைவாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், வயதானவர்கள், பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு உள்ளவர்கள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்துவது முக்கியம்.

அடிப்படை சுகாதார நடைமுறைகள் மற்றும் சுவாச நெறிமுறைகள், அடிக்கடி கை கழுவுதல், இருமல் மற்றும் தும்மும்போது மூக்கு மற்றும் வாயை மூடுதல் உள்ளிட்டவை எல்லா நேரங்களிலும் பராமரிக்கப்பட வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.



## "கொவிட் புதிய திரிபும் பரவி வருகிறது"

இந்த துணை வகை மாறுபாடுகள் குறித்து நமது நாட்டில் எந்த வித பரிசோதனைகளும் நடைபெறுவதாக காண முடியவில்லை என்றார்.

விசேட கூற்றொன்றை முன்வைத்து வியாழக்கிழமை (22) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மருத்துவமனை கட்டமைப்பில் மேலும் 50 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கும் பற்றாக்குறை நிலவி வருகின்றன. இவற்றில், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், வலி நிவாரணிகள், இன்சுலின், இதய நோய் மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்கும் கடுமையான பற்றாக்குறை நிலவி வருகின்றன என்றார்.

இவை பொதுமக்களால் எழுப்பப்படும் கேள்விகள் ஆகும். இன்றும் கூட, தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது குறித்து சுகாதார அமைச்சு பேசி வருகிறது. ஆனால் மருந்துப் பற்றாக்குறை தொடர்பிலோ அல்லது சுகாதாரத் துறை குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கோ எந்தப் பதிலும் இல்லை. நாட்டு மக்களின் வாழும் உரிமையை பாதுகாப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு எந்த ஆர்வமும் இல்லை. இலவச சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கும் இந்த அரசாங்கம் ஆர்வம் காட்டுவதாக இல்லை.

LP 8.1 எனப்படும் கோவிட் மாதிரிகளின் துணை மாறுபாடு தொடர்பாக எமது நாட்டிலும் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். மருத்துவமனைகளில் இந்த அறிகுறிகளைக் காண்பிப்பவர்களுக்கு கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அவ்வாறே சின்னம்மை பரவுவதாலும் கடுமையான பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதற்கு குறைந்த பட்சம் 6 வாரங்கள் தொடராக சிகிச்சையளிக்க வேண்டும். இந்த நோய் பரவுவதற்கான சாத்தியாம் அதிகரித்து காணப்படுகின்றன. எனவே, இதற்கும் தெளிவான திட்டமொன்று முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# பூவரசங்குளம் OIC க்கு விளக்கமறியல்

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி 5 இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற முற்பட்ட போது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் புதன்கிழமை (21) கைது செய்யப்பட்டிருந்தார்.

கொழும்பில் இருந்து வருகை தந்த குறித்த ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதுடன், குறித்த வழக்கு 27ஆம் திகதிக்கு பின்னர் கொழும்பு நீமன்றுக்கு மாற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# பத்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறை

2006 நவம்பர் 1 முதல் 2008 செப்டம்பர் 31 வரை சட்டவிரோத நிதி நிறுவனத்தை நடத்தி பொதுமக்களிடமிருந்து மோசடி செய்யப்பட்ட பணத்தில் அறுபது சதவீதத்தை திருப்பிச் செலுத்தியதற்காக இந்த இடைநிறுத்தப்பட்ட தண்டனை விதிக்கப்பட்டது.

அதன்படி, பிரதிவாதிகள் தலா ஐந்து லட்சம் (50) ரூபாய் வீதம் இருபது தவணைகளில் பணத்தை செலுத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

சக்விதி ரணசிங்க, அவரது மனைவி மற்றும் சக்விதி ஹவுஸ் கட்டுமான நிதி நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவின் பதினொரு உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது, மேலும் மீதமுள்ள பிரதிவாதிகளை வழக்கிலிருந்து விடுவிக்க சட்டமா அதிபர் முன்னர் முடிவு செய்திருந்தார்.

வழக்கு வியாழக்கிழமை



(22) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதை பரிசீலித்த பின்னர், ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை விதித்த உயர் நீதிமன்ற நீதிபதி, குற்றத்தை ஒப்புக்கொண்டு அறுபது சதவீத பணத்தை செலுத்தியதுடன், பிரதிவாதிகளுக்கு தலா 25,000 ரூபாய் அபராதம் விதித்தார்.

அபராதம் செலுத்திய பின்னர் பிரதிவாதிகளின் கைரேகையை பதிவு செய்து பின்னர் விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

# பிள்ளையானின் மனுவுக்கு திகதி

பாதுகாப்பு அமைச்சர் அனுர திசாநாயக்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் போனது தொடர்பாக மட்டக்களப்பில் உள்ள தனது கட்சி அலுவலகத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, ஏப்ரல் 8 ஆம் திகதி அங்கு வந்த குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் தான் கைது செய்யப்பட்டதாக மனுதாரர் கூறுகிறார்.



பாதுகாப்பு அமைச்சர் அனுர திசாநாயக்க, அவர் மீதான விசாரணைக்காக அவரை 90 நாட்கள் தடுத்து வைக்க ஏப்ரல் 12 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தார்.

# "மக்கள் மீது உப்பு சுமை"

இந்தியாவில் இருந்து உப்பு இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கும் நிலையில் இந்தியாவில் இருந்து உப்பு புதன்கிழமை (21) இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. உப்பு இறக்குமதி செய்வதற்கு முன்னரே அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொண்டுள்ளது. அதன் பிறகே தனியார் துறைக்கு உப்பு இறக்குதிக்கு அனுமதி வழங்கி இருப்பது தற்போது இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருப்பதன் மூலம் தெளிவாகிறது.

நாட்டில் தற்போது உப்பு மாபியா உருவாகியுள்ளது . இதற்காக அரசாங்கத்துக்கு யாராவது உந்துசக்தியாக இருக்கிறார்களா ? இதுதொடர்பில் அரசாங்கம் தேடிப்பார்க்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராகவே மக்கள் இந்த அரசாங்கத்துக்கு பாரியதொரு ஆணையை வழங்கி இருக்கின்றனர் என்றார்.

ஒருசில தனியார் நிறுவனங்களின் முதலாளிமார், புத்தளத்தில் பங்குகளை பெற்றுக்கொண்டு, அதில் பணிப்பாளர் சபையிலும் இருக்கின்றனர். இந்த நாட்டில் உப்பு உற்பத்தி செய்யப்படுவதில் சரிபாதி உப்பு உற்பத்தி செய்யப்படும் பிரதேசம் புத்தளம். ஆனால் புத்தளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பு இன்று சந்தையில் இல்லை. இது யாராவது திட்டமிட்டு செய்கிறார்களா என்பது தொடர்பில் அரசாங்கம் தேடிப்பார்க்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

# "விலை பேசுகின்றனர்"



பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) இடம்பெற்ற நிதிச் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முறைமை திருத்தப்பட வேண்டும் என் ஜனாதிபதியிடம் அனைத்து கட்சி மாநாட்டின்போது, தெரிவித்திருந்தேன். இந்த முறையினால் யாருக்கும் ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்படும் என்றும் தெரிவித்திருந்தேன். ஜனாதிபதியும் இதனை ஏற்றுக் கொண்டார். ஆனால், இதன்போது பக்கத்தில் இருந்த அமைச்சர் ஒருவரே தற்போது இதனைச் செய்ய முடியாது என தெரிவித்தார். பழைய முறையில் தேர்தலை நடத்த முடியுமான முறையில் திருத்தம் மேற்கொண்டு தேர்தலை நடத்தி இருந்தால், வெற்றிபெறும் கட்சிக்கு உள்ளூராட்சி சபையில் ஆட்சி செய்திருக்க முடிந்திருக்கும்.

அதேநேரம், பெரும்பான்மை இல்லாத சபைகளில் ஆட்சியமைக்க தற்போது பாரியளவில் உறுப்பினர்களுக்கு விலை பேசப்படுகிறது. கல்பிட்டியில் உள்ளூராட்சி சபை ஒன்றில் ஆட்சியமைக்க அரசாங்கத்தை சேர்ந்த ஒருவர் எதிர்க்கட்சியில் ஒரு உறுப்பினருக்கு 25 இலட்சம் ரூபாய் பேரம் பேசி இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இது நல்லதல்ல. அதனால் இதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இல்லாவிட்டால் எதிர்காலத்தில் எமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போது, நாங்கள் அந்த மாற்றத்தை மேற்கொள்வோம் என்றார்.

# சமலுக்கு எதிராக காணி குற்றச்சாட்டு

குறிப்பாக வளவே வலயத்தில், எந்தவொரு அடிப்படைகளும் இன்றி பிரபல ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அரசியல் நண்பர்களுக்கக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் மோசடி நடந்துள்ளன. இதனால் கடந்த 10 வருடங்களாக அங்கே காணிகள் வழங்கப்பட்ட முறை தொடர்பில் மீளாய்வு செய்யுமாறு கோரிக்கைக விடுகின்றேன்.



மேலும் வளவே வலயத்தில் மகாவலி நிலங்களை வழங்கப்பட்ட முறைமைகளை மீள் மறுபரிசீலனை செய்து, எந்தவொரு உற்பத்தி பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படாத நிலங்களை கையகப்படுத்த வேண்டும். இந்த நிலங்கள், உண்மையில் பயிர் செய்யும் அல்லது சாத்தியமான திட்டங்களைத் தொடங்க நம்பும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றார்.

இதன்போது பதிலளித்த பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க, குறித்த காணிகள் தொடர்பில் ஆராயப்படுவதாககவும், அந்த காணிகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்குமாக இருந்தால் விசாரணைகளை ஆரம்பிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

# மாணவர்களே இலக்கு: ஹெரோயின் சிக்கியது

தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையின் போது, மூன்று சிறிய பொட்டலங்களில் பொதி செய்யப்பட்டிருந்த ஹெராயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பதுளை, ஹிகுருகமுவ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

# 13 வயது சிறுமி வன்புணர்வு: சிக்கினார் பிக்கு

13 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அந்த பிரதேசத்தில் உள்ள விகாரையின் பிக்கு, எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

செவனகல பிரதேசத்தைச் சேர்ந்த பிக்குவே, எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

உடல் முழுவதும் கொப்புளங்கள் ஏற்பட்டு தாங்கமுடியாத அரிப்பு மற்றும் வயிறு கோளாறு காரணமாக, அந்த சிறுமி தன்னுடைய தந்தையுடன் கடந்த 18ஆம் திகதியன்று விஹாரைக்கு சென்று பிக்குவை சந்தித்துள்ளனர்.

அன்றைய தினம் தேசிக்காயை வெட்டி, ஏதோ மந்திரம் செய்த பிக்கு, மறுநாள் வருமாறு கூறி, வரும்போது, வெட்டிய தேசிக்காயையும் எடுத்துவருமாறு, தேசிக்காயையும் கொடுத்து அனுப்பியுள்ளார்

அதேபோல், மறுநாளும் தன்னுடைய மகளை அழைத்துக்கொண்டு தந்தை, விஹாரைக்கு சென்றுள்ளார்.

இருவரையும் அமரச் சொன்ன பிக்கு, வெட்டி தேசிக்காயை வழிந்தோடும் நீரில் வீசி விட்டு வருமாறு தந்தையிடம் கூறியுள்ளார். பிக்கு கூறியதை அடுத்து, தேசிக்காயை எடுத்துக்கொண்டு, விஹாரையில் இருந்து தந்தை வெளியே சென்றுள்ளார்.

அப்போது, சிறுமியைத் தான் வசிக்கும் வீட்டுக்கு அழைத்துச் சென்ற பிக்கு, அங்கு வைத்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

தந்தை திரும்பி வந்தபோது, பிக்கு வசிக்கும் வீட்டில் இருந்து மகள் வெளியே வந்துள்ளார். தந்தையும் என்ன?என்ன? என்று கேட்டபோது, மகள் ஒன்றுமே கூறவில்லை.

எனினும், வீட்டுக்கு வரும் வழியில் தனக்கு நேர்ந்ததைத் தந்தையிடம் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர், தந்தை செவனகல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்பின்னர் 42 வயதான பிக்கு கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதன் பின்னர், நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வைத்திய பரிசோதனைக்காக எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சிறுமி, அனுமதிக்கப்பட்டுள்ளார்.




# ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய தேர் திருவிழா

பண்டாரவளை ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய வருடாந்திர தேர் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை (20) அன்று நடைபெற்றது.

ஊவா மாகாண ஆளுநர், சட்டத்தரணி ஜே.எம். கபில ஜெயசேகர இந்த விழாவில் கலந்து கொண்டு ஆசிகளைப் பெற்றார். மேலும் இதில் குறித்த பிரதேசத்தில் உள்ள மதத் தலைவர்கள் உட்பட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

- சுமனசிறி குணதிலக்க





# நாடு தாங்குமா?

எதற்கும் அரசிடம் தீர்க்கமான தீர்வுகள் இல்லை. இனி ஒரு நெருக்கடி வருகிறதா? வந்தால் நாடு தாங்குமா? என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கேள்வி எழுப்பி உள்ளார்.

நாட்டின் பொருளாதார சவால்கள் தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆடை தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. பல பிரபல ஆடை தொழில் முனைவர்கள் சத்தமில்லாமல் தம் தொழிற்சாலைகளை அயல் நாடுகளுக்குக் கொண்டு போகிறார்கள். வேலை இழப்பு ஏற்படுகிறது. உள்நாட்டில் பணப்புழக்கம் குறைகிறது. 2024ஆம் ஆண்டு இலாபம் காட்டிய மின்சார சபை இன்று எப்படி ஆறு மாதத்தில் நஷ்டம் என்று கேட்டால் பதில் சொல்ல ஆளில்லை என்றார்.

தைத்த ஆடை ஏற்றுமதி துறை சார் ஆடை தொழிற்சாலை ஒன்று ஆயிரத்து நானூற்றுக்கு அதிகமான தொழிலாளரை (lay-off) விலத்தி விட்டார்கள். ஏற்கெனவே பல பிரபல ஆடை தொழில் முனைவர்கள் சத்தம் இல்லாமல் தம் தொழிற்சாலைகளை இந்தியாவுக்கும், வியட்நாமுக்கும் கொண்டு போகிறார்கள்.

ட்ரம்ப் வரி விவகாரத்தின் பிரதிபலிப்பு இதுவாகும். அது இன்னமும் முடிவுக்கு வரவில்லை. "ட்ரம்ப் நிர்வாகத்துடன் நாம் பேசி விட்டோம். இதோ, ஸ்ரீலங்கா-யூஎஸ் கூட்டு அறிக்கை வருகிறது" என ஜனாதிபதி அநுரவே சொன்னார்.

ஆனால், "அதெல்லாம் இல்லை. நூற்றுக்கணக்கான நாடுகளுடன் ஒவ்வொன்றாக கூட்டு-அறிக்கை வெளியிட முடியாது. இலங்கை அரசின் விளக்கம் பிழை" என நான் கேட்ட போது, யூஎஸ் தரப்பில் இருந்து விளக்கம் தந்தார்கள் என்றார்.

**"தைத்த ஆடை ஏற்றுமதி துறை சார் ஆடை தொழிற்சாலை ஒன்று ஆயிரத்து நானூற்றுக்கு அதிகமான தொழிலாளரை (lay-off) விலத்தி விட்டார்கள். ஏற்கெனவே பல பிரபல ஆடை தொழில் முனைவர்கள் சத்தம் இல்லாமல் தம் தொழிற்சாலைகளை இந்தியாவுக்கும், வியட்நாமுக்கும் கொண்டு போகிறார்கள்**



# ஜனாதிபதி பரிந்துரையை பேரவை நிராகரித்துள்ளது

புதிய தலைமை கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு எச்.டி.ஜி.சந்தன என்ற பெயர் ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்டது. இது தொடர்பில் அரசியலமைப்பின் பேரவையின் தலைவரான சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் அரசியலமைப்பு பேரவை புதன்கிழமை (20) மாலை பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் கூடி ஆராய்ந்தது.

ஜனாதிபதியின் பெயர் பரிந்துரைக்கு சார்பாக பிரதமர் ஹரிணி அமரசூரிய, சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, மற்றும் ஜனாதிபதியின் பிரதிநிதியான அபூபக்கர் ஆதம்பாவா ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர்.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா, மற்றும் சிவில் சமூகத்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று சிவில் பிரதிநிதிகள் ஜனாதிபதியின் பரிந்துரைக்கு எதிராக வாக்களித்தனர்.

சிறுபான்மை சமூகத்தினரை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினரான தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் பேரவையின் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இதனைத் தொடர்ந்து, பெரும்பான்மை வாக்குகளினால் ஜனாதிபதியின் பரிந்துரை தோற்கடிக்கப்பட்டு, குறித்த யோசனை அரசியலமைப்பு பேரவையால் நிராகிக்கப்பட்டது.


இந்நிலையில் புதிய தலைமை கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதியின் பல்கலைக்கழக நண்பர் ஒருவரை நியமிப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த பதவிக்கு கணக்காளர் நாயகம் திணைக்களத்தில் சேவை தர அடிப்படையில் பிறிதொரு வர் உள்ள நிலையில், வெளியக நிறுவனத்துடன் தொடர்புடைய ஒருவரை தலைமை கணக்காய்வாளர்நாயகமாக நியமிக்க முயற்சிப்பதாக அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

# 'குஷ்'ஷுடன் நால்வர் கைது

சுமார் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 'குஷ்' போதைப் பொருளுடன் 'ரெட் சேனல்' ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்து வெளியே கொண்டு செல்ல முயன்ற நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு-02 ஐ சேர்ந்த 57 வயதுடைய தொழிலதிபர் ஒருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், விமான நிலைய பாதுகாப்பு கேமரா அமைப்பைக் கண்காணித்த போது, இந்தக் கும்பலின் ஏனைய மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



ஏனைய மூவர் கொழும்பு -வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த 45,42 வயதுடைய தம்பதியினர் மற்றும் கொழும்பு -15 இல் வசிக்கும் ஒரு தொழிலதிபர் என தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்ப்பாணத்தில் திருமணமான யுவதி கடத்தல்

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இளவாலை சந்திக்கு அருகாமையில் புதன்கிழமை (22) அன்று யுவதி ஒருவர் கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 22 வயது யுவதியும், பூநகரி கௌதாரிமுனை பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞனும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்துள்ளனர். பெண் வீட்டாருக்குப் பயந்து இருவரும் தலைமறைவாக இருந்துள்ளனர்.

பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இளவாலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்றனர். இதன்போது அங்கு வந்த பெண் வீட்டார் குறித்த யுவதியை பிரிப்பதற்கு முயற்சி செய்தபோதும், இருவருக்கும் 18 வயது நிறைவடைந்தாலும், இருவரும் பிரிவதற்கு விருப்பம் தெரிவிக்காத நிலையில் அவர்களைப் பிரிக்க முடியாது என இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் பெண் வீட்டாரின் கட்டாயத்தின் பேரில் இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# 25 விவசாயிகள் வெளியேற்றப்பட்டனர்

எஸ்.கீதபொன்கலன்

திருகோணமலை-முத்து நகர் பகுதியில் இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த 25 பேருக்கு நீதிமன்ற உத்தரவு சமர்ப்பிக்கப்பட்டு வெளியேற்றும் நடவடிக்கை வியாழக்கிழமை(22) இடம்பெற்றது.

திருகோணமலை உப்புவெளி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட முத்துநகர் கிராம சேவகர் பிரிவில் உள்ள தகர வெட்டுவான் விவசாய சம்மேளனத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த விவசாயிகள் 25 பேரை வெளியேற்றும் நடவடிக்கை திருகோணமலை நீதவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைய நீதிமன்ற பதிவாளரால் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகார சபையினால் குறித்த விவசாயிகளுக்கு எதிராக திருகோணமலை நீதவான் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

குறித்த இடத்திற்கு துறைமுக அதிகார சபை உத்தியோகத்தர்களுடன் அப்பகுதியில் சோலார் திட்டத்தை மேற்கொள்ளவுள்ள நிறுவனத்தின் பிரதிநிதிகளும் பிரசன்னமாகியிருந்தனர். அத்துடன், பாதுகாப்பு நடவடிக்கைக்காக விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் மற்றும் துறைமுக அதிகார சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் வரவழைக்கப்பட்டிருந்தனர்.




அப்பகுதியில் 1980ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே தாம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் 1984ஆம் காலப்பகுதியில் அமைச்சரவையின் அனுமதி இன்றி குறித்த காணிகள் இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களுக்கு முன் குறித்த காணிகளை இந்திய சோலார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியுள்ளனர். இதனால் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் எம்மை வெளியேற்றி அக்காணிகளை சோலார் திட்டத்திற்கு வழங்க உள்ளனர் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், "இது தொடர்பில் தற்போதைய அரசாங்கத்திடம் முறையிட்டும் எவ்வித ஆக்கபூர்வமான பதில்களும் எமக்கு வழங்கப்படவில்லை. அத்துடன், நீதிமன்ற நடவடிக்கைக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் எனவும், இலங்கை துறைமுக அதிகார சபைக்கு உத்தியோகபூர்வமான முறையில் குறித்த காணிகள் கையளிக்கப்பட்ட பின்னர் அவற்றை மக்களுக்கு பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதி ஒருவர் எம்முடன் கலந்துரையாடியிருந்தார். அதன் அடிப்படையில் இன்று நாம் எதிர்ப்பு நடவடிக்கை எவற்றையும் மேற்கொள்ளவில்லை எனவும்" விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர விடம் தொலைபேசியில் வினவியபோது, நீதிமன்ற நடவடிக்கைக்கு நாம் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தக் கூடாது எனவும் குறித்த காணிகள் அளக்கப்பட்டு இலங்கைத் துறைமுக அதிகாரசபையிடம் கையளிக்கப்படுமேயன்றி சோலார் நிறுவனத்திற்கு கையளிக்கப்படமாட்டாது எனவும் அவர்கள் அப்பகுதிக்கு செல்லமாட்டார்கள். அத்துடன், அவர்களுக்கு இந்த காணிகளை வழங்குவதா அல்லது அதற்கு பதிலாக வேறு காணிகளை வழங்குவதா என்பது தொடர்பில் பின்னர் முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

**"அவர்களுக்கு இந்த காணிகளை வழங்குவதா அல்லது அதற்கு பதிலாக வேறு காணிகளை வழங்குவதா என்பது தொடர்பில் பின்னர் முடிவு எடுக்கப்படும் என பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்**

# குண்டசாலை முன்னாள் தவிசாளருக்கு பிணை

சம்பளத்தில் இருந்து சம்பாதிக்க முடியாத சொத்துக்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட குண்டசாலை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஏகநாயக்க வலவ்வே அசேல, கொழும்பு பிரதான நீதவான் தானு ஜன லக்மாலி, பிணையில் வியாழக்கிழமை (22) விடுவிக்கப்பட்டார்.

சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, தலா ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

2009 முதல் 2016 வரை பிரதேச சபையின் தவிசாளர் பணியாற்றிய சந்தேக நபர், ஒரு வருடத்திற்குள் தனது சம்பளத்திலிருந்து சம்பாதிக்க முடியாத சொத்துக்களைப் பெற்றுள்ளதாகப் புகார் அளிக்கப்பட்டது. விசாரணைகள் நிறைவடைந்ததாக இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சமர்ப்பித்த சமர்ப்பிப்புகளைப் பரிசீலித்த பின்னர், அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

# மொட்டுகளின் எதிர்காலத்திற்கு ஏற்பட்டுள்ள சோகம் கொடூரமானது

சமூகப் பிரச்சினைகளில், தற்போது மிகவும் கடுமையான சமூகப் பிரச்சினை பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பயன்படுத்துவதாகும். கடந்த சில வருடங்களாக, பாடசாலை செல்லும் வயதானவர்கள், போதைப்பொருள் வைத்திருந்தமை, பயன்படுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டது.

மஸ்கெலியா, பதுளை ஆகிய பிரதேசங்களில் மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனைச் செய்யப்பட்டமை, கடந்த ஒருவார காலத்துக்குள் இடம்பெற்றுள்ளது. இவை தொடர்பில், பொலிஸாரும் பொதுமக்களையும் பெற்றோரையும் அறிவுறுத்தியுள்ளனர். அதேபோல, பாடசாலை சமூகமும், போதைப்பொருள் விவகாரத்தில் விழிப்பாக இருக்கவேண்டும்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களின் கூடாரமாக இலங்கை மாறியுள்ளது.

கொக்கெயின், அபின், ஹஷிஷ், ஐஸ் மற்றும் ஹெராயின் ஆகியவை உலகில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் போதைப்பொருட்கள். தற்போது, போதைப்பொருள் வியாபாரிகள், இந்த நாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு ஐஸ் மற்றும் ஹெராயினை கவனமாக விநியோகிப்பதன் மூலம் மாணவர்களைப் போதைக்கு அடிமையாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தொழிலை மிகவும் இரகசியமான முறையில் போதைப்பொருள் வியாபாரிகளும் நடத்தி வருகின்றனர். பாடசாலை மாணவர்களுக்கு, இனிப்பு பானங்கள், டொபிக்கள், சாக்லேட்டுகள் போன்றவற்றில் கஞ்சா, புகையிலை போன்ற பல்வேறு போதைப்பொருட்களை விற்பனை செய்வது. அவர்கள் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு இளம் பிள்ளைகளுக்கு இலவசமாகப் போதைப்பொருட்களைக் கொடுக்கின்றனர்.

பிள்ளைகள் போதைப்பொருளுக்கு அடிமையாகும்போது, ஒரு சிறிய விலையை வசூலிக்கிறார்கள். பின்னர் தங்களை சுற்றியிருப்பவர்களையும் போதைக்குள் இழுத்து விடுகின்றனர். போதைப்பொருளைக் கொள்வனவு செய்வதற்குப் பணம் கிடைக்காதபோது, ஏனைய குற்றச்செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

நாட்டின் எதிர்காலம் பிள்ளைகளால் தீர்மானிக்கப்படுகிறது. பாடசாலை மாணவர்கள் ஒரு நாட்டின் எதிர்கால ஆற்றல் மற்றும் அவர்கள் தற்போதைய மதிப்புகள் மற்றும் மதிப்புகளை எதிர்காலத்தில் பாதுகாப்பாகக் கொண்டு செல்லும் ஒரு குழு, உலகிற்குப் படித்த மற்றும் புத்திசாலித்தனமான பிள்ளைகளை வழங்குவதே ஒவ்வொரு தாய் மற்றும் தந்தையின் ஒரே நோக்கம் - ஆசிரியர்களும் இதற்காக அயராது உழைக்கிறார்கள்

இதுபோன்ற அப்பாவி பூக்கள் மற்றும் மொட்டுகளின் எதிர்காலத்திற்கு ஏற்பட்டுள்ள சோகம் மிகவும் கொடூரமானது. போதைப்பொருள் நாட்டில் ஒரு பேரழிவாகும், மேலும் அது முழு சமூகத்தையும் விழுங்கி வருகிறது. அத்தகைய சமூகத்தில், பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்து பெரியவர்கள் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

உடல் வளர்ச்சி மற்றும் மனமாற்றம் நிறைந்த காலகட்ட பருவத்தில் இருக்கும் பாடசாலை பிள்ளைகள், அந்த வயதில் ஏற்படும் உடல் மற்றும் மன மாற்றங்களுடன் சவாலான புதிய அனுபவங்களைப் பெற மிகவும் ஆர்வமாகவும் விருப்பமாகவும் இருப்பார்கள். எனவே, போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த பிள்ளைகளை எளிதில் போதைப்பொருட்களைப் பயன்படுத்தத் தூண்டும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

போதைப்பொருள் பாவனையின் மிகக் கடுமையான விளைவு மரணமாகும் என்பதை நாமும் வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136


Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

அறிவைப் பெருக்கி ஆணவத்தைச் சுருக்கு! ஆனால், கல்விமான்களில் ஒருசிலரைத் தவிர ஏனையோர் ஆணவமிடுக்குடன்தான் வாழ்கின்றார்கள். இது பொதுவானது என ஆன்மீகம் விளக்குகின்றது.

கல்வி என்பதே பொதுவுடைமை வரம். பாடசாலைகளில் கல்வி கற்காதவர்களும் சுயமாகத் தங்கள் அறிவை உயர்ந்த நிலையில் பேணுகின்றார்கள். அதனுடன், அனுபவ ஞானத்தையும் இணைத்து, புலமையாளர்களாகத் திகழ்கின்றார்கள்.

ஆனால், இந்த உலகம் பட்டதாரிகளை மட்டுமே, உயர்நிலையில் ஏற்றுக்கொள்கின்றது. படித்தவர்களைக் கௌரவப்படுத்தல் முக்கியமானது. ஆனால், தங்கள் கல்வியை, அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களைக் காணாமல் இருக்கின்றார்கள். கல்வியைப் பலவழிகளில்த் தேடலாம்.

விஞ்ஞானிகள், எழுத்துலக மேதைகள் எல்லோரும் பாடசாலைக் கல்விக்கூடாகப் படித்தவர்கள் அல்லர்; சுயசிதனையூடாகத் தங்களைப் புடம்போட்டுத் தங்கமாக உருவானவர்கள் ஆவர். கல்வி ஞானம், எல்லையில்லாப் பரமானந்தம் போன்றது.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை– 21

# பண்டாரநாயக்கவின் பின், அவரது அடிச்சுவட்டில்

பண்டாரநாயக்க 1959இல் கொலை செய்யப்பட்டவையானது சுதந்திரத்திற்கு பிந்தைய இலங்கையின் ஒரு தசாப்தகால பொருளாதாரக் கொள்கைகளை முடிவுக்குக் கொண்டுவந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு இலங்கையின் பொருளாதார விரிவாக்கத்தைத் துரிதப்படுத்தும் முயற்சியின் சில வெற்றிகளையும், அந்த முயற்சி உருவாக்கிய சில சிக்கல்களையும் ஆராய்ந்த பிறகே, 1960 முதல் காலகட்டம் பற்றிய விவாதத்திற்குச் செல்ல முடியும். அபிவிருத்தி முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என்ற உண்மையை நாம் ஏற்றாக வேண்டும். டிசெம்பர் 1960 முதல் கடுமையான இறக்குமதி மற்றும் பரிமாற்றக் கட்டுப்பாடுகளை வன்முறையாகவும் அவசரமாகவும் அரசாங்கம் விதித்தது, அன்றிலிருந்து தீவின் மக்கள் மீது சுமத்தப்பட்ட துன்பங்கள் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட வளர்ச்சியின் மந்தநிலை அனைத்தும் ஏதோ ஒரு வகையான அடிப்படைத் தோல்வியைக் குறிக்கின்றன. 1950களின் அபிவிருத்தி முயற்சியில் ஏற்பட்ட தோல்வி, உண்மையான உற்பத்தி வளர்ச்சியின் நியாயமான திருப்திகரமான விகிதத்தை வழங்கத் தவறியதால் ஏற்பட்டதல்ல, மாறாக இந்த வளர்ச்சியின் இயல்பான விளைவாக ஏற்பட்ட செலவின ஓட்டங்களை போதுமான அளவு கையாளத் தவறியமையால் ஏற்பட்டது. தனியார்த் துறையில் அதிக நுகர்வு மற்றும் இறக்குமதி போக்குகள், பொது வருவாயில் மந்தநிலை, பொது முதலீட்டு ஒதுக்கீட்டில் உள்ள குறைபாடுகள், போதுமான அளவு முதலீட்டைத் தூண்டத் தவறியது போன்றனவே இதற்கான காரணங்களாகும்.

இந்தப் பற்றாக்குறைகள் எதுவும் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான சீரான செயல்பாட்டிற்கு ஆபத்தானவை அல்ல. அவை அனைத்தும் அடையக்கூடிய உற்பத்தி வளர்ச்சி விகிதத்தைக் குறைக்க உதவியது, மேலும் அவை அனைத்தும் அதிகரித்து வரும் வரவு - செலவு சமநிலை (balance of payments) அழுத்தங்களுக்குப் பங்களித்தன. ஆனால், போதுமான பொதுக் கொள்கைகள் இயற்றப்பட்டிருந்தால், குறைந்த வளர்ச்சி விகிதத்தில் வெளிப்புற சமநிலையை அடைந்திருக்கலாம். அபிவிருத்திச் சூழலில் அதிகப்படியான மொத்த தேவையின் தோற்றம் இயல்பானது, ஆனால், நடப்பு மற்றும் மூலதனச் செலவினங்கள் முறையே வெளிப்புறப் பற்றாக்குறைகள் மூலம் நிதியளிக்கப்படும் விகிதாச்சாரத்தில் இது ஒரு பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. அதிக நடப்புச் செலவினங்களை முதலீடாக மாற்றுவதன் மூலம் அதிக வளர்ச்சி விகிதத்தை உருவாக்க முடியும்.

ஆனால், முதலீட்டு விகிதத்தைப் பொருட்படுத்தாமல், வெளிப்புற ஏற்றத்தாழ்வு பிரச்சினையில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம். 1960இல் இலங்கையைத் தாக்கிய பேரழிவை, வெளிநாட்டு சொத்துக்கள் குறைவதற்கு முன்பே அடிப்படை கொடுப்பனவு சமநிலையில் உள்ள பற்றாக்குறைகள் சரிசெய்யப்பட்டிருந்தால் மட்டுமே தவிர்த்திருக்க முடியும். இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய உயர் மட்டங்களிலிருந்து இந்த சொத்துக்களின் சில திட்டமிடப்பட்ட குறைப்பு பாதுகாக்கக்கூடியதாக இருந்திருக்கும், ஆனால், ஒரு விவேகமான குறைந்தபட்ச அளவை அடைந்தவுடன், இறக்குமதிகளின் வளர்ச்சியை வெளிப்புறக் கணக்குகளில் அடிப்படை சமநிலைக்கு இசைவான வரம்புகளுக்குள் வைத்திருப்பது முற்றிலும் அவசியமாகியிருக்கும். ஐம்பதுகளின் பிற்பகுதியில் இது செய்யப்படவில்லை என்பதால், அறுபதுகளின் முற்பகுதியில் இந்த நெருக்கடி அரசாங்கத்தின் மீது திணிக்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, அது செய்யப்பட வேண்டியதை விட சில ஆண்டுகள் கழித்தும், விருப்பத்திற்குப் பதிலாக அவசியத்தாலும் செய்யப்பட்டது என்பது ஒரு முக்கியமான வேறுபாடாக நிரூபிக்கப்பட்டது.

மார்ச் 1960 தேர்தல்கள் பண்டாரநாயக்கவின் படுகொலையின் நிழலில் நடத்தப்பட்டன, டபிள்யூ. தஹநாயக்கவின் இடைக்கால அரசாங்கத்தின் தோல்வியால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (ஸ்ரீ.சு.க.) தேர்தல் பிரசாரத்தை நில அமைச்சர் சி.பி.டி.சில்வா வழிநடத்தினார். பண்டாரநாயக்க, வேட்பாளராக இல்லாவிட்டாலும், மேடைகளில் தோன்றி தனது மறைந்த கணவரின் நற்பண்புகளைப் புகழ்ந்தும், தனக்கு ஏற்பட்ட பேரழிவை நினைத்துத் துக்கமடைந்தும் இருந்தார். 1953ஆம் ஆண்டு சுயமாகத் தன்னைத் தனிமைப்படுத்திய பிறகு தேசிய அரசியலில் மீண்டும் நுழைந்த டட்லி சேனநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) பிரசாரத்திற்கு தலைமை தாங்கினார். தேர்தலின் போது எந்த கடுமையான பொருளாதார பிரச்சினைகளும் எழுப்பப்படவில்லை. ஐதேக ஒரு கடுமையான தமிழர் எதிர்ப்பு பிரச்சாரத்தை நடத்தி 145 இடங்களில் 50 இடங்களை வென்றது. ஸ்ரீ.சு.க. 46 இடங்களையும் வென்றன. தமிழரசுக்கட்சி 15 இடங்களை வென்றது. பாராளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையிலான இடங்களைக் கொண்ட கட்சியின் தலைவராக இருந்ததால், டட்லி சேனநாயக்க அரசாங்கத்தை அமைத்தார். ஆனால், ஐ.தே.கவின் இந்த சிறுபான்மை அரசாங்கம் ஏப்ரல் 19 அன்று சிம்மாசன உரையின் மீதான வாக்கெடுப்பில் உடனடியாக தோற்கடிக்கப்பட்டது, மறுநாள் பாராளுமன்றம் மீண்டும் கலைக்கப்பட்டது.

ஜூலை 1960 தேர்தல்களுக்கு, ஐ.தே.க. தோற்கடிப்பதற்காக ஸ்ரீ.சு.கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி (ல.ச.ச.க.) மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி (க.க.) ஆகியவற்றுடன் உடன் ஒரு தேர்தல் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. இந்த முறை பண்டாரநாயக்க தானே ஸ்ரீ.சு.கட்சியின் பிரசாரத்திற்குத் தலைமை தாங்கினார். 145 இடங்களில் 75 இடங்களைப் பெற்று வெற்றி பெற்றார். ஸ்ரீ.சு.க. பதிவான வாக்குகளில் 33.6% மட்டுமே பெற்றதால், ல.ச.ச.க. மற்றும் கக உடனான ஒப்பந்தத்தால் அது அதிக நன்மை அடைந்தது என்பது தெளிவாகிறது. உண்மையில் ஐ.தே.க. அதை விட அதிக வாக்குகளைப் (37.6%) பெற்றது. ஆனால், 30 இடங்களை மட்டுமே பெற்றது. தமிழரசுக் கட்சி 16 இடங்களையும், ல.ச.ச.க. 12 இடங்களையும், வென்றது. பண்டார நாயக்க பிரதமராகப் பதவியேற்றார், இதன் மூலம் உலகின் முதல் பெண் பிரதமரானார். தேர்தலின் போது, பண்டாரநாயக்கவை மிகவும் இழிவான முறையில் கேலிச்சித்திரம் செய்த லேக் ஹவுஸ் செய்தித்தாள் குழுவை வாயடைக்கச் செய்ததே அவரது முதல் நடவடிக்கையாகும்.

அரசாங்கம் பெற்றோலிய விநியோகத்தை தேசியமயமாக்கத் தொடங்கியது. அது பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தை நிறுவி, ஷெல், கால்டெக்ஸ் மற்றும் எஸ்ஸோ எண்ணெய் நிறுவனங்களின் சொத்துக்களில் 25மூ ஐ எடுத்துக் கொண்டது. இது துணிவான அதேவேளை முற்போக்கான நடவடிக்கையாகும். தேசிய மயமாக்கலுக்கு உள்ளூர் பத்திரங்களில் இழப்பீடு வழங்க முன்வந்தாலும், இந்தச் சாதனமும் வழங்கப்பட்ட தொகையும் எண்ணெய் நிறுவனங்களுக்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருந்தன. இதனால் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி 1962ஆம் ஆண்டு அமெரிக்க வெளிநாட்டு உதவிச் சட்டத்தின் பிரிவு 620E (ஹிக்கன்லூப்பர் திருத்தம்) இன் கீழ் இலங்கைக்கான 3 மில்லியன் டாலர் உதவித் திட்டத்தை நிறுத்தினார். இது அமெரிக்க குடிமக்களின் சொத்துக்களை தேசிய மயமாக்கும் நாடுகளுக்கு உடனடி மற்றும் போதுமான இழப்பீடு வழங்காமல் அமெரிக்க அரசாங்கம் உதவி வழங்குவதைத் தடை செய்கிறது. பெரிய சக்திகளின் பழிவாங்கலுக்கு அஞ்சாத பண்டாரநாயக்காவின் அரசாங்கம் காப்பீட்டு வணிகத்தையும் தேசியமயமாக்கத் தொடங்கியது. 1961ஆம் ஆண்டில், அரசாங்கம் மக்கள் வங்கியை ஒரு வணிக வங்கியாகவும் கிராமப்புற கடன் ஆதாரமாகவும் நிறுவியது.

1960ஆம் ஆண்டு தனது முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்த அரசாங்கத்தின் நிதியமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, “தேசிய பொருளாதாரத்தின் முழுமையான வளர்ச்சியையும் சோசலிச சமூகத்தை நோக்கிய முன்னேற்றத்தையும் நோக்கமாகக் கொண்ட தொடர்ச்சியான பட்ஜெட்டுகளில் இது முதலாவது” என்று கூறினார்.

அரசாங்கம் நிதிப் பற்றாக்குறையுடன் ஆட்சியைத் தொடர்ந்தது. 1960-64 ஆண்டுகளில், இந்தப் பற்றாக்குறை ஆண்டுக்கு சராசரியாக ரூ.440 மில்லியன் அல்லது மொத்த செலவினத்தில் 20% ஆக இருந்தது. மூலதனச் செலவுகள் தேக்கமடைந்தன. பற்றாக்குறையை நிதியளிப்பதற்காக, அரசாங்கம் விரிவாக்க வங்கிக் கடன் வாங்குவதற்கும் காப்பீட்டுக் கழகம், ஊழியர் சேமலாப நிதி மற்றும் பிற அரசுக்குச் சொந்தமான சேமிப்பு நிறுவனங்கள் போன்ற வங்கி அல்லாத நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்குவதற்கும் தலைப்பட்டது. கருவூல உண்டியல்களுக்கான சட்டரீதியான வரம்பு 1961 இல் ரூ.750 மில்லியனில் இருந்து 1962இல் ரூ. 1,000 மில்லியனாகவும், மார்ச் 1963இல் ரூ.1,150 மில்லியனாகவும் அதிகரிக்கப்பட்டது. இது வரவிருந்த நெருக்கடியைக் கோடுகாட்டியது.

## கடிதங்கள்

### வீதியை புனரமைப்பது யார்?

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பெரிய நீலாவணை முதல் நிந்தவூர் வரையிலான கரையோர பாதையினை பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தி வருகின்றனர்

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இக்கரையோர பாதையானது பாண்டிருப்பு எல்லை வீதி , கரையோர வீதியுடன் இணையும் பகுதியில் இருந்து குன்றும் குழியுமாக காணப்படுகிறது. இதனால் இவ்வீதியில் பயணம் மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

இது தவிர இவ்வீதி ஊடாக அன்றாடம் அரச ஊழியர்கள் தனியார் ஊழியர்கள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பயணம் செய்வதை காணக்கூடியதாக இருக்கின்றது

மழை காலங்களில் இவ்வீதி சேறும் சகதியுமாக காணப்படுவதனால் இவ்வீதியில் செல்கின்ற மீனவர்கள் பல்வேறு விபத்துகளுக்கு முகம் கொடுப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்

– பாறுக் ஷிஹான்

கொமர்ஷல் வங்கி முதல் காலாண்டில்

# சிறந்த நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்தது





கொமர்ஷல் வங்கி குழுமம், 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஆரோக்கியமான இலாபம் மற்றும் ஐந்தொகை வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (CSE) சமர்ப்பித்த அறிக்கையில், 2025 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டின் முதலாவது காலாண்டில் அதன் சொத்துக்கள் ரூ.2.999 ட்ரில்லியனை எட்டியுள்ளதாக தெரிவித்துள்ளது.

காலாண்டில் மொத்த வருமானமானது 9.85%ஆல் அதிகரித்து ரூ.88.10 பில்லியனாகவும், வட்டி வருமானமானது 3.14%ஆல் அதிகரித்து ரூ.72.60 பில்லியனாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறைந்த வட்டி விகிதத்தின் அடிப்படையில் கடன்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டதன் விளைவாக வட்டி செலவுகள் 10.09% ஆல் குறைந்து ரூ.38.38 பில்லியனாக உள்ளது. இதனால் நிகர வட்டி வருமானத்தில் 23.53% வளர்ச்சி ஏற்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்ட மூன்று மாத காலப்பகுதியில் இது ரூ.34.21 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மொத்த செயல்பாட்டு வருமானமானது 33.40%ஆல் அதிகரித்து ரூ.46.62 பில்லியனாக உள்ளது. எனினும், குழுவின் குறைபாட்டு கட்டணங்கள் மற்றும் பிற இழப்புகளுக்கான ஒதுக்கீடானது 110.44%ஆல் அதிகரித்து ரூ.7.23 பில்லியனை பதிவு செய்துள்ளது. தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு விவேகமான அடிப்படையில் மேலதிக ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் விளைவாக வங்கியின் குறைபாட்டுக் கடன்கள் (நிலை 3) விகிதத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது.

இதன் விளைவாக, மூன்று மாதங்களுக்கான நிகர செயற்பாட்டு வருமானமானது, ரூ.39.39 பில்லியனாக, 25.00% வளர்ச்சியைப் பிரதிபலித்தது. அதே வேளை, செயற்பாட்டுச் செலவுகளை ரூ.12.80 பில்லியனாகக் கட்டுப்படுத்தும் குழுவின் திறன் காரணமாக, வெறும் 6.20% அதிகரிப்புடன், நிதியியல் சேவைகளுக்கான வரிகளுக்கு முந்தைய செயற்பாட்டு இலாபம் 36.64%இனால் அதிகரித்து ரூ.26.59 பில்லியனாக உயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

நிதியியல் சேவைகளுக்கான வரிகள் 48.18%ஆல் அதிகரித்து ரூ.4.03 பில்லியனாக உயர்ந்ததன் விளைவாக மூன்று மாதங்களுக்கு குழுமத்தின் வரிக்கு முந்தைய இலாபம் ரூ.22.56 பில்லியனாக உயர்ந்தது, இது 34.77% அதிகரிப்பாகும். வருமான வரி 27.92% அதிகரித்து ரூ.7.58 பில்லியனாக உயர்ந்துள்ளது. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலாண்டில் குழுமத்தின் நிகர இலாபம் ரூ.14.97 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இது 38.52% கீழ்நிலை வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

தனித்தனியாக எடுத்துக்கொண்டால், கொமர்ஷல் வங்கியானது மூன்று மாதங்களுக்கு வரிக்கு முந்தைய இலாபமாக ரூ.21.88 பில்லியனையும், வரிக்கு பிந்தைய இலாபமாக ரூ.14.50 பில்லியனையும் பதிவு செய்துள்ளது, இது முறையே 35.10% மற்றும் 38.71% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

மார்ச் 31, 2025 நிலவரப்படி மதிப்பாய்வு செய்யப்பட்ட மூன்று மாதங்களில் குழுமத்தின் மொத்த சொத்துக்கள் ரூ.122.85 பில்லியன் அல்லது 4.27% அதிகரித்து ரூ.2.999 ட்ரில்லியனை எட்டியுள்ளது. குழுமத்தின் மொத்த கடன்கள் மற்றும் முன்பணங்கள் ரூ.1.642 ட்ரில்லியனாகும், இது ரூ.116.75 பில்லியன் அல்லது மூன்று மாதங்களில் 7.65% வளர்ச்சியாகும், இது மாதாந்தம் சராசரி ரூ.38.92 பில்லியனாகும். முந்தைய 12 மாதங்களில் கடன் புத்தக வளர்ச்சி ரூ.326.02 பில்லியனாக இருந்தது, அத்துடன் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி 24.77%, மாதத்திற்கு சராசரியாக ரூ.27.17 பில்லியனாக இருந்தது.

இதற்கிடையில், மீளாய்வு செய்யப்பட்ட மூன்று மாதங்களில் வைப்புத்தொகையானது ரூ.105.82 பில்லியன் அல்லது 4.59% அதிகரித்து ரூ.2.412 டிரில்லியனாக உள்ளது. இதன் மாதாந்த சராசரி வளர்ச்சி ரூ.35.27 பில்லியனாகவும், ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி 12.67% ஆகவும் உள்ளது. 12 மாதங்களில் மாதாந்த சராசரி வளர்ச்சி ரூ.22.60 பில்லியனாக உள்ளது.

# யூனியன் வங்கி – IBSL புரிந்துணர்வு உடன்படிக்கை

யூனியன் வங்கி மற்றும் இலங்கை வங்கியியலாளர் நிறுவகம் (IBSL) புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. வங்கியியல் மற்றும் நிதியியல் பிரிவில் உயர் கல்வியை தொடரும் மாணவர்களுக்கு உயர் பிரயோக பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்த உடன்படிக்கை அமைந்துள்ளது.

இந்த உடன்படிக்கையை யூனியன் வங்கியின் பிரதம மக்கள் மற்றும் மாற்றியமைப்பு அதிகாரி ஜயந்த அமரசிங்க மற்றும் இலங்கை வங்கியியலாளர் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் சி.பி.ஏ. கருணாதிலக ஆகியோர் வைபவ ரீதியாக பரிமாறிக் கொண்டனர்.

கல்விசார் அறிவை நிஜ உலக அனுபவத்துடன் இணைக்கும் யூனியன் வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது. அத்துடன் IBSL இன் மாணவர்களுக்கு நிறுவகத்தின் பிரயோக பயிற்சி வழிகாட்டல்களுக்கமைவான பிரயோக பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.



# மனமெல்லாம் நிறைந்தே கிடக்கிறது...



பூங்கறை மணம் நிறைந்த சட்டியில்
ஓங்கழித்துக் கிடக்கிறது
வயிறு..!
முருங்கை இலைத்துளிர்
தேடிப்பிடிக்காத அம்மாவின்
கையில்
என்ன பிழை காண்பது..!
செதில்கள் பறக்க
பூனைக்கு அருகில் குந்தி இருந்து
செப்பலித்தலை எல்லாம் எனக்கு
என்ற ஏக்கம்
அம்மாவின் மனதில்
கிடக்கும்தான்..!

அவசரம் அவசரமாக
தேங்காய் துருவல் நடத்தி
சம்பலும் சோறுமாக
பசி போக்குகையில்
அம்மா திட்டி தீர்த்தது எல்லாம்
இது நல்ல மீனக்கா
நம்புங்கள் என்ற
மீன்காரரைத்தான்..!

இப்போது எல்லாம்
மீன்காரர்களை பார்க்கையில்
பூங்கறை மணம் மட்டுமே
சூழ்ந்து கொள்கிறது..!

– காரையன் கதன் –

# குறும்(புக்) கவிதை...!



சேறள்ளி வீசி
களமாடிய கைகள்
ஈரம் காயமுதல்
கைகோர்த்து
கட்டித் தழுவி
பதவிப் பங்கீட்டு..!

புனித பூமிப்
பிரகடனம்
சரியாக நிரூபணமானது
புதைகுழி மனித எச்சம்..!

அத்துமீறல்
நீதியானது
தையிட்டி..?

சொப்பிங் பாக்குடன்
திரிந்தவன்
செகுசு மாளிகையில்
அச்சாவாய் கைகொடுத்தது
அவனுக்கு
அரசியல் வியாபாரம்..!

என்னவிலை அதிகரித்தாலும்
விலை கேட்காது
வெற்றிகரமான இலாபத்துடன்
மதுக் கடை
மருந்துக் கடை..!

– ஷெல்லிதாசன் –

# நான் மட்டுமே



இறுதியில் நான் மட்டும் தானே
எத்தனை எத்தனை பிரியங்கள்..!

எத்தனை எத்தனை நேசம்
எத்தனை நம்பிக்கை
எத்தனை பற்றுதல்
எத்தனை தோழமை..!

அத்துனை(ணை) இருந்தும்
இரவொன்றில் தனித்திருந்து
பாடல் கேட்கும் நேரங்களில்
சொல்லிக்கொள்கிறேன்..!

எனக்கு நான் மட்டும் தானே,
இறுதியில் நான் மட்டும் தான்
நான் என்பதே என் நித்திய சத்தியம்

– சோபி –





# விஜேவர்தன சவால் கிண்ணம் 2025



விஜய நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தில் பல்வேறு துறைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட டி.ஆர்.விஜேவர்தன சவால் கிண்ணம் - 2025 கிரிக்கெட் போட்டி நாரஹேன்பிட்டியில் உள்ள ஷாலிகா மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (17) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (18) ஆகிய தினங்களில் நடைபெற்றது.

விளம்பரத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணி இறுதிப் போட்டியில் டெய்லி மிரர் அணியை வீழ்த்தி ஒரு அற்புதமான வெற்றியைப் பதிவு செய்ததுடன் டெய்லி மிரர் அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

நிறுவனத்தின் நலன்புரி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போட்டியில், விஜய நிறுவனத்தில் உள்ள பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 22 அணிகள் பங்கேற்றன.

டெய்லி மிரர் அணியின் திலின வீரவன்ச தொடர் நாயகனாகவும், தர்ஷன சஞ்சீவ பாலசூரிய சிறந்த பந்து வீச்சாளர் விருதையும் பெற்றனர். சிறந்த துடுப்பாட்ட வீரர் விருது பசன் சஞ்சயவிற்கும், விளம்பர அணியைச் சேர்ந்த எரங்க குமார இறுதி ஆட்ட நாயகனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெண்கள் பிரிவில், தலைமை அலுவலக B அணி சாம்பியன்ஷிப்பை வென்றது, தலைமை அலுவலக A அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

விஜய செய்தித்தாள்களின் தலைமை நிர்வாக அதிகாரி ஜனக ரத்னகுமார, டெய்லி மிரர் பிரதம ஆசிரியர் ஜமிலா ஹுசைன், விளம்பர துணைப் பொது மேலாளர் நிபுலி வீரதுங்க, நலன்புரி சங்கத் தலைவர் துமிந்த சஞ்சீவ பாலசூரிய, பிரதி தலைவர் அஜந்த குமார அகலகட்ட, நலன்புரி பொருளாளர் ரோஷன் தந்திரிகே மற்றும் செயலாளர் அனுஜா குமாரதுங்க ஆகியோர் விருதுகளை வழங்கினர்.

முன்னணி விளம்பர நிறுவனமான 'ஒகில்வி', செலான் வங்கி மற்றும் ஜனசக்தி ஆகியவை நிகழ்வின் அனுசரணையாளர்களாக கூட்டு சேர்ந்தன.







பாகிஸ்தான்

### இந்திய விமானங்கள் பறக்க

# மேலும் ஒரு மாதம் தடை

பாகிஸ்தான் வான்எல்லையில் இந்திய விமானங்கள் பறக்க விதிக்கப்பட்ட தடை மேலும் ஒரு மாதம் நீட்டிக்கப்படுவதாக, பாகிஸ்தான், புதன்கிழமை (21) அறிவித்துள்ளது.

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ஐ.சி.ஏ.ஓ.) விதிகளின் படி, ஒரே நேரத்தில் ஒரு மாதத்திற்கு மேல் வான்வெளி கட்டுப்பாடுகளை விதிக்க முடியாது என்பதால், கடந்த மாதம் பாகிஸ்தான் விதித்த தடை மே 23ஆம் திகதி வரை அமுலில் உள்ளது.

இந்த நிலையில், அந்த தடையை நீட்டித்து புதன்கிழமை (21) அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா

### இஸ்ரேல் தூதரக

# ஊழியர்கள் படுகொலை

அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் அமைந்துள்ள இஸ்ரேல் நாட்டுத் தூதரகத்தில் உள்ள யூத அருங்காட்சியகத்திற்கு அருகில் இஸேரல் தூதரகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இருவர் பயங்கரவாதி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக அமெரிக்க நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் கிறிஸ்டி நோயம் கூறியுள்ளார்.




இந்த விபரங்களை வெளியிட அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது,

துப்பாக்கிச் சூட்டில் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் உயிரிழந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய நபரைக் கைது செய்த போது, பாலிஸ்தீனத்தை விடுதலை செய்ய வேண்டும் என்று கோஷம் எழுப்பினார். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து ஐ.நா. சபைக்கான இஸ்ரேலிய தூதர் டேனி டானன் கூறியதாவது,

“யூத சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பது எல்லை மீறி உள்ளது. யூத எதிர்ப்பு பயங்கரவாதத்தின் மோசமான செயல் இது. இந்த மோசமான குற்றவாளியை நாங்கள் நீதியின் முன் நிறுத்துவோம்.

இந்த குற்றச் செயலுக்குப் பொறுப்பானவர்கள் மீது அமெரிக்க அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். உலகில் எல்லா இடங்களிலும் அதன் குடிமக்களையும் பிரதிநிதிகளையும் பாதுகாக்க இஸ்ரேல் தொடர்ந்து உறுதியாகச் செயற்படும்” என்றார்.



உத்தர பிரதேசம்

### தீ விபத்தில்

# 200 வீடுகள் சேதம்

உத்தரப்பிரதேசம் - பதாயுன் மாவட்டத்தில் உள்ள தப்பா ஜாம்னி கிராமத்தில், ஏறப்பட்ட தீ விபத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

தப்பா ஜாம்னி கிராமத்தில், புதன்கிழமை (21) இரவு புயல் ஏற்பட்டது. இந்த புயலின் தாக்கத்தால் மின்மாற்றியில் தீ ஏற்பட்டுள்ளது. இந்த தீயானது சில நொடிகளில் பல பகுதிகளுக்குப் பரவத் தொடங்கியுள்ளது.

இந்த தீயால் அப்பகுதி மக்கள் வளர்த்து வந்த கால்நடைகள் கருகி உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த தீ அந்த கிராமத்தைச் சுற்றி உள்ள 200க்கும் மேற்பட்ட வீடுகள் சுற்றி பரவியது. தீயில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளக் கிராம மக்கள் ஓடியதில் ஒருவர் தீயில் காயமடைந்துள்ளர்.

அகமதாபாத்

### குஜராத்தில் சிங்கங்களின்

# எண்ணிக்கை உயர்வு

ஆசிய சிங்கங்கள் குஜராத்தின் கிர் காடுகளில் மட்டுமே காணப்படும். தற்போது கிர் தேசிய பூங்காவுக்கு வெளியேயும், காடுகள் அல்லாத மற்றும் கடலோர பகுதிகள் உட்பட குஜராத்தின் 11 மாவட்டங்களிலும் இந்த சிங்கங்கள் பரவி உள்ளன. குஜராத் மாநில வனத்துறையால் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சிங்க கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.




அதன்படி 6ஆவது ஆசிய சிங்க கணக்கெடுப்பு கடந்த 10ஆம் திகதி தொடங்கி நடைபெற்றது. 3,000 தன்னார்வலர்கள் உதவியுடன் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்நிலையில், கணக்கெடுப்பு விவரங்கள் குறித்து வன தலைமை பாதுகாவலர் ஜெய்பால் சிங் கூறியதாவது,

“ஆசிய சிங்கங்கள் கடந்த 5 ஆண்டுகளில் 217 அதிகரித்துள்ளன. மொத்த ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை 891ஆக உயர்ந்துள்ளது. கிர் தேசிய பூங்கா மற்றும் வனவிலங்கு சரணாலயத்தில் மட்டும் 384 சிங்கங்கள் காணப்பட்டன. எல்லைக்கு வெளியே 507 சிங்கங்கள் காணப்பட்டன. இதில் 196 ஆண் சிங்கங்கள், 330 பெண் சிங்கங்கள், 140 இளம் சிங்கங்கள், 225 சிங்கக் குட்டிகள் அடங்கும்.

“கடைசியாக 2020ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் 674 சிங்கங்கள் இருந்தன. போர்பந்தரில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள பர்தா சரணாலயத்தில் 17 சிங்கங்கள் உள்ளன. சிங்கங்களை அடையாளம் காண உயர் தெளிவுத்திறன் கொண்ட கேமராக்கள் மற்றும் ரேடியோ காலர்கள் போன்ற உயர் தொழில்நுட்ப கருவிகள் பயன்படுத்தப்பட்டன” என தெரிவித்தார்.




### யூரோப்பா லீக்: மன்செஸ்டரை வென்று

# சம்பியனான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோப்பா லீக் தொடரில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சம்பியனானது.

ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிக் பில்பாவோவின் மைதானத்தில் வியாழக்கிழமை(22) அதிகாலை நடைபெற்ற இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான இறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே 17 ஆண்டுகளின் பின்னர் தொடரொன்றில் டொட்டென்ஹாம் சம்பியனானது.

டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை பிரென்னன் ஜோன்சன் பெற்றிருந்தார்.

சம்பியனானதன் மூலம் சம்பியன்ஸ் லீக் தொடரில் தமதிடத்தை டொட்டென்ஹாம் உறுதிப்படுத்திக் கொண்டது.

# செய்ஃபேர்ட் பிரதியீடு

இந்தியன் பிறீமியர் லீக்கின் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவானது இங்கிலாந்தின் ஜேக்கப் பெத்தெல்லுக்கு தற்காலிகப் பிரதியீடொன்றாக நியூசிலாந்தின் விக்கெட் காப்பாளர் டிம் செய்ஃபேர்ட்டைக் கைச்சாத்திட்டுள்ளது.



### ஐ.பி.எல்:

# தகுதிகாண் போட்டிகளில் மும்பை

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) தகுதிகாண் போட்டிகளுக்கு மும்பை இந்தியன்ஸ் தகுதி பெற்றுள்ளது.

மும்பையில் புதன்கிழமை(21) நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே தகுதிகாண் போட்டிகளுக்கு மும்பை தகுதி பெற, தகுதிகாண் போட்டிகளுக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பை டெல்லி இழந்தது.

இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட மும்பை, சூரியகுமார் யாதவ்வின் ஆட்டமிழக்காத 73 (43), திலக் வர்மாவின் 27 (27), றயான் றிக்கெல்டனின் 25 (18), நாம் திர்ரின் ஆட்டமிழக்காத 24 (08), வில் ஜக்ஸின் 21 (13) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 4-0-22-1, விப்ராஜ் நிகம் 4-0-25-0, முஸ்தபிசூர் ரஹ்மான் 4-0-30-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 181 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி, தீபக் சஹர், ட்ரெண்ட் போல்ட், வில் ஜக்ஸ், மிற்செல் சான்ட்னெர் (3), ஜஸ்பிரிட் பும்ரா (3), கரண் ஷர்மாவிடன் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 18.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 121 ஓட்டங்களையே பெற்று 59 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சூரியகுமார் யாதவ் தெரிவானார்.

இந்நிலையில், லக்னோவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு எதிர்கொள்ளவுள்ளது.




### பங்களாதேஷுக்கு எதிரான தொடருக்கான

# பாகிஸ்தான் குழாமில் ஷகீன் இல்லை

பங்களாதேஷுக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் குழாமில் ஷகீன் ஷா அஃப்ரிடி இடம்பெறவில்லை.

இந்நிலையில் ஹஸன் அலி, நசீம் ஷா, பாஹீம் அஷ்ரஃப் ஆகியோர் குழாமுக்குத் திரும்பியுள்ளனர்.

குழாம்: சல்மான் அக்ஹா (அணித்தலைவர்), ஷடாப் கான் (உப அணித்தலைவர்), அப்றார் அஹ்மட், பாஹீம் அஷ்ரஃப், பக்கர் ஸமன், ஹரிஸ் றாஃப், ஹஸன் அலி, ஹஸன் நவாஸ், ஹுஸைன் தலாட், குஷ்டில் ஷா, மொஹமட் ஹரிஸ் (விக்கெட் காப்பாளர்), மொஹமட் வஸிம், முஹமட் இர்ஃபான் கான், நசீம் ஷா, சஹிப்ஸடா பர்ஹான் (விக்கெட் காப்பாளர்), சைம் அயூப்.






### பங்களாதேஷுக்கு எதிரான தொடரை

# கைப்பற்றியது அமீரகம்

பங்களாதேஷுக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை ஐக்கிய அரபு அமீரகம் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை பங்களாதேஷும், இரண்டாவது போட்டியை ஐக்கிய அரபு அமீரகமும் வென்ற நிலையில் ஷார்ஜாவில் புதன்கிழமை (21) நடைபெற்ற தீர்மானமிக்க மூன்றாவது போட்டியை அமீரகம் வென்றதன் மூலமே 2-1 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அமீரகம்

பங்களாதேஷ்: 162/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜாகிர் அலி 41 (34), தன்ஸிட் ஹஸன் 40 (18), ஹஸன் மஹ்மூட் ஆ.இ 26 (15), ஷொரிஃபுல் இஸ்லாம் ஆ.இ 16 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹைதர் அலி 3/7 [4], துருவ் பஷார் 1/24 [3], ஆகிஃப் ராஜா 1/27 [4])

அமீரகம்: 166/3 (19.1 ஓவ.) (துடுப்பாட்டம்: அலிஷான் ஷரஃபு ஆ.இ 68 (47), ஆசிஃப் கான் ஆ.இ 41 (26), முஹமட் ஸொஹைப் 29 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொரிஃபுல் இஸ்லாம் 1/24 [4], ரிஷாட் ஹொஸைன் 1/32 [4])

போட்டியின் நாயகன்: அலிஷான் ஷரஃபு.

தொடரின் நாயகன்: முஹமட் வஸீம்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 23, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.